# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஒன்பதாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - எங்கானல்
## பராங்குச நாயகி ’என் காதலுக்குக் காரணம் திருமாலின் வடிவழகே’ என்று எம்பெருமானது வடிவழகே பற்றாசாகத் திருமூழிக்களத்தே பறவைகளைத் தூது விடுதல்

** எங்கானல் அகம் கழிவாய் * இரைத் தேர்ந்து இங்கு இனிது அமரும் *
செங்கால மட நாராய்! * திருமூழிக்களத்து உறையும் **
கொங்கார் பூந்துழாய் முடி * எம் குடக் கூத்தர்க்கு என் தூதாய் *
நுங்கால்கள் என் தலை மேல் * கெழுமீரோ நுமரோடே 1

நுமரோடும் பிரியாதே * நீரும் நும் சேவலுமாய் *
அமர் காதல் குருகு இனங்காள்! * அணி மூழிக்களத்து உறையும் **
எமராலும் பழிப்புண்டு * இங்கு என்? தம்மால் இழிப்புண்டு *
தமரோடு அங்கு உறைவார்க்குத் * தக்கிலமே? கேளீரே 2

தக்கிலமே? கேளீர்கள் * தடம் புனல் வாய் இரை தேரும் *
கொக்கு இனங்காள்! குருகு இனங்காள்! * குளிர் மூழிக்களத்து உறையும் **
செக்கமலத்து அலர் போலும் * கண் கை கால் செங்கனி வாய் *
அக்கமலத்து இலை போலும் * திருமேனி அடிகளுக்கே 3

திருமேனி அடிகளுக்குத் * தீ வினையேன் விடு தூதாய் *
திருமூழிக்களம் என்னும் * செழு நகர் வாய் அணி முகில்காள்! **
திருமேனி அவட்கு அருளீர் * என்றக்கால் * உம்மைத் தன்
திருமேனி ஒளி அகற்றித் * தெளி விசும்பு கடியுமே? 4

தெளி விசும்பு கடிது ஓடித் * தீ வளைத்து மின் இலகும் *
ஒளி முகில்காள்! * திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடர்க்கு **
தெளி விசும்பு திரு நாடாத் * தீ வினையேன் மனத்து உறையும் *
துளி வார் கட்குழலார்க்கு * என் தூது உரைத்தல் செப்புமினே 5

தூது உரைத்தல் செப்புமின்கள் * தூ மொழி வாய் வண்டு இனங்காள்! *
போது இரைத்து மது நுகரும் * பொழில் மூழிக்களத்து உறையும் **
மாதரைத் தம் மார்வகத்தே * வைத்தார்க்கு என் வாய் மாற்றம் *
தூது உரைத்தல் செப்புதிரேல் * சுடர் வளையும் கலையுமே 6

சுடர் வளையும் கலையும் கொண்டு * அருவினையேன் தோள் துறந்த *
படர் புகழான் * திருமூழிக்களத்து உறையும் பங்கயக் கண் **
சுடர் பவள வாயனைக் கண்டு * ஒரு நாள் ஓர் தூய் மாற்றம் *
படர் பொழில் வாய்க் குருகு இனங்காள்! * எனக்கு ஒன்று பணியீரே 7

எனக்கு ஒன்று பணியீர்கள் * இரும் பொழில் வாய் இரை தேர்ந்து *
மனக்கு இன்பம் பட மேவும் * வண்டு இனங்காள்! தும்பிகாள்! **
கனக் கொள் திண் மதிள் புடை சூழ் * திருமூழிக்களத்து உறையும் *
புனக் கொள் காயா மேனிப் * பூந்துழாய் முடியார்க்கே 8

பூந்துழாய் முடியார்க்குப் * பொன் ஆழிக் கையாருக்கு *
ஏந்து நீர் இளங்குருகே! * திருமூழிக்களத்தாருக்கு **
ஏந்து பூண் முலை பயந்து * என் இணை மலர்க் கண் நீர் ததும்ப *
தாம் தம்மைக் கொண்டு அகல்தல் * தகவன்று என்று உரையீரே 9

தகவன்று என்று உரையீர்கள் * தடம் புனல் வாய் இரை தேர்ந்து *
மிக இன்பம் பட மேவும் * மென் நடைய அன்னங்காள்! **
மிக மேனி மெலிவு எய்தி * மேகலையும் ஈடு அழிந்து * என்
அகமேனி ஒழியாமே * திருமூழிக்களத்தார்க்கே 10

** ஒழிவு இன்றித் திருமூழிக்களத்து உறையும் * ஒண்சுடரை *
ஒழிவில்லா அணி மழலைக் * கிளி மொழியாள் அலற்றிய சொல் **
வழு இல்லா வண் குருகூர்ச் * சடகோபன் வாய்ந்து உரைத்த *
அழிவில்லா ஆயிரத்து இப்பத்தும் * நோய் அறுக்குமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---